REGD No. M. 4643

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 13—5—51 | இதழ் 47

"நாம் எல்லாம் ஒரே குடும்பம்!"

கோரமான புயல்—சில நிமிடங்கள்தான். ஆனால், அந்தச் சிங்காரச் சிறுநகர் சிதைந்தது—வீழ்ந்தது.

'ஐயோ!' என்று அலறவில்லை. 'என்ன செய்வோம்?' என்ற கூக்குரல் எழும்பவில்லை. 'என்ன பாடுபட்டோம் இதை நிர்மாணிக்க' என்ற பெருமூச்சு அங்கே எழும்பவில்லை.

பல்லாயிரக் கணக்கான மக்கள், பாதியளவு பெண்கள் — எனினும் இங்குமங்கும் ஓடவில்லை. திகைக்கவில்லை. பதறவில்லை!

புயலைத் தொடர்ந்து—ஒரு கடு மழை. அதுவும், சிறிது நேரந்தான். எனினும் அங்கிருந்த புத்தகக் கடைகளை, சிற்றுண்டிக் கடைகளையெல்லாம் 'குளம்' ஆக்கிச் சென்றது.

மழையிலே, மக்கள்! அவர்களின் நடுவிலே, கருப்பு பாதியும் சிவப்பு பாதியுமான அடையாள உடை அணிந்த தொண்டர்கள் 'மெதுவாக வெளியேறுங்கள் — கவலை வேண்டாம். வெளியேறுங்கள்' என்று கூவியவாறே, பம்பரம் போல் சுழன்று கொண்டிருந்தனர்.

"என்ன பாடுபட்டோம் தெரியுமா? இவ்வளவு பெரிய பந்தல் அமைக்க. பிற மாநாட்டுப் பந்தல் அளவை விடப் பெரிது, இது. ஆனாலும், போதுமோ, கூட்டம் அதிகமாகி அல்லல் வருமோ, என்றெல்லாம் அஞ்சினோம். அதைப் போலவே காலையில் நான் கண்டிராத அளவு மக்கள் வந்தனர்—குடும்பத்தோடு, குழந்தைகளோடு. ஆனால், நாங்கள் எதிர்பார்த்தது போல மக்களைக் கட்டுப்படுத்த சிரமம் ஏற்படவில்லை எங்களுக்கு. அவ்வளவு அமைதியைக்கண்டேன்! பூரித்துப் போனேன்!! பந்தல் அலங்காரங்கள், எங்கும் கண்டிராத புதுவித மேடை அமைப்பு, மாட மாளிகையின் வாயிலோ என்று பிறர் கூறுமளவுக்குப் போட்டிருந்த பந்தல் முகப்பு, அங்கே, மேகங்களுக் கிடையே வெண்ணிலா போல, நாங்கள் நிர்மாணித்திருந்த வெள்ளுடை வேந்தன் தியாகராயர் திருஉருவம்......சின்னஞ் சிறுநகர் போலிருந்ததே, சிறிது நேரத்துக்கு முன்பு! இப்போது—சின்னா பின்னமாகி விட்டதே." என்று கூறவில்லை, சேலம் மாநாட்டுச் செயலாளர் தோழர் எ. சித்தையன். 'ஓடுங்கள்! புதுமூங்கில்கள் வரட்டும். தொண்டர்களே திரளுங்கள்—என்ன? மின்சார பல்புகள் நாசமாகி விட்டனவா, சரி. ஊம்...நடக்கட்டும்' என்று, இங்குமங்கும், ஓடிக் கொண்டிருந்தார், விலாவிலே அம்பு பட்ட புலிபோல. "இன்னும் கொஞ்சநேரத்தில் பாருங்கள், இதே இடம். அதே பந்தல். ஆகிறதா இல்லையா என்று!"—பெருமூச்சோடு, ஆனால், வீரத்தோடு சொன்னார், வரவேற்புக் குழுத் தலைவர் ஜி. பி. சோமசுந்திரம்.

"இதோ, வந்துவிட்டேன். என்ன செய்யவேண்டும்" என்று, காற்று போலச்சுழன்றார்கள், அமைதியேஉருவானநாராயணசாமி,வேல்.

"தொண்டர்களே!ஏன், தாமதம்? நடக்கட்டும் வேலைகள். நம்மாலா முடியாது, வீழ்ந்த இந்த பந்தலை நிமிர்க்க?" என்று வீரச்சொல் தந்துகொண்டிருந்தார்கள்ஜலகண்டபுரம் ப. கண்ணன், பெருமாள்.

இவர்கள்தான் என்றல்ல — சேலம் மாவட்ட வீரர்கள் எல்லோரும் (பெயர்களைக் குறிப்பதானால் பட்டியல் நீளும். அவ்வளவு பேரும் நமது அருமைச் சகோதரர்கள் தான்!) ஆடி, ஓடி வீழ்ந்த பந்தலை நிமிர்க்க வியர்வை விழ விழ, வேலை செய்துகொண்டிருந்தனர்.

வீழ்ந்தது பந்தல்—ஆகவே, சிறு நகர் போல அமைக்கப்பட்டிருந்த அந்த இடம், அனுமனால் சீரழிந்த 'இலங்கை' போலாயிற்று.

5—5—51 காலை சேலம் மாவட்ட மாநாடு துவங்கி, முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவடைந்த இடைவேளை, நேரம் அப்போதுதான் இந்த அலங்கோலப் புயல்.

புயலுக்குப் பின், வீழ்ந்த பந்தலையும், முறிந்து தொங்கிய வளைவுகளையும், அறுந்து கிடந்த அலங்காரங்களையும், அகமகிழ்ந்து மேலே கொட்டகை வீழ்ந்ததால் கேடுற்றுப் போன மின்சார அமைப்புகளையும், கண்டோர் இதயமும் கண்களும், கண்ணீராலேதான் நிரம்பும்!

ஆனால், சேலத்து வீரர்கள் சிந்தை கலங்கவில்லை. தொடர்ந்து எப்படியும் மாநாட்டை நடத்துவதென்றே முடிவு செய்தனர். ஒலிபெருக்கி, மின்சார அமைப்பு ஆகியவைகளைப் பெருமைப் படத்தக்க முறையில் அமைத்திருந்த திருச்சி, நமது கழகப்பற்று மிக்க, ராபி கம்பெனியாளரை அழைத்து 'உடனே — ஒலிபெருக்கி—லைட் ஆகட்டும்' என்றனர். தோழர் ராபி 'இதோ!' என்று சிரித்த முகத்தோடு சொன்னார். ரூபாய் ஆயிரத்துக்கு மேல் நஷ்டமிருக்கும், ஒடிந்த 'மைக்'; அறுந்த 'வொயர்', தூளான 'பல்பு'கள் மூலம். அதுமட்டுமல்ல, பந்தலுக்கடியில் மாட்டிக்கொண்டதால் முதுகிலே வேறு அடி! ஆயினும், அவர் 'இதோ!' என்றார். சிறிது நேரத்துக்கெல்லாம், பந்தலுக்கருகிலேயிருந்த வெட்ட வெளியிலே, 'மாநாடு', குறிப்பிட்டபடி தொடங்கிற்று.

* * *

இதனை, இரண்டாம் நாள் பேசிய பொதுச் செயலாளர், குறிப்பிட்டார்.

அடித்தது; ஆரியப் புயல் — திராவிடம், இன்று அலங்கோலப் படுத்தப்பட்ட பந்தல், ஆனால், கடமையே கருத்தில் கொண்ட காளைகள், பொறுப்புணர்ந்து பணியாற்றும் தீரர்கள், உணர்ச்சி மிக்க வாலிபர்கள் விழுந்த பந்தலை நிமிர்த்திவிட்டார்கள். ஆம், நாம் முயன்றால் சிதைந்த திராவிடத்தைச் சீராக்க முடியும் என்பதே, பந்தல் விபத்து தரும் பாடம்.

பந்தல் விழுந்தது, சேலத்திலே—பதைக்கவில்லை, தோழர்கள். ஏன் பதைக்கப் போகிறார்கள், பந்தல் எரிந்ததைக் கண்டே, பயங்கொள்ளாதவர்கள்! ஆகவே, பந்தல் மீண்டும் எழுந்தது.

சேலம் செயலாற்றும் வீரர்கள் கூடாரம்!

அங்கு தீட்டப்படும் திட்டம் எதுவும், மாலையில் மங்கையரின் கூந்தலை அலங்கரித்து, காலையிலே குப்பை மேட்டுக்குச் சென்றிடும் கசங்கிய மலரானதில்லை.

சேலம் — செயலாற்றும் காலமறிந்து பணியாற்றும்.

அந்தச் செயலும், ஒரு காலங் காட்டியாகத் தானிருக்கும்.

சிறு புயல் நேற்று வீசி பந்தலைச் சாய்த்தது—இதற்கு முன்னர் பெரும் புயலே வீசியிருக்கிறது — அப்பொழுது சாய்ந்தது, பந்தலல்ல — சீமான்கள், பூமான்கள்!

சேலம் மாநாட்டுத் தலைவர், தோழர் வி. எம். ஜான் இதனை எடுத்துக் காட்டினார்.

'மாளிகை வாசிகளுக்கும், குடிசை வாழ்வினருக்கும் இடையே இருந்த மாபெரும் பள்ளத்தாக்கை நிரப்பும் வீண் வேலையிலே ஈடுபடாமல் குடிசை வாழ்வினரின் பாசறையாக, நம்மியக்கத்தை மாற்றிற்று. அதுவரை முதலாளித்துவ ரீங்காரத்திலும், கனதனவான்களின் கைலாகிலும், நிலச்சுவான்தாரர்களின் கடைக்கண் பார்வையிலும் வளர்ச்சியைக் கண்டதாகப்பெருமையடித்த கட்சியை அந்தப் பயங்கரமான சூழ்நிலையிலிருந்து மாற்றி, கழனியிலே நிற்கும் சாதாரணக் குடிமகனின் தாழ்வாரமாக மாற்றிற்று! பட்டாடைகளும், சரிகைத் தலைப்பாகைகளும் குவிந்த கிடந்த இடங்கள் கிழிந்த, அழுக்கேறிய கந்தல் துண்டுகளால் நிரப்பப்பட்டன. மது சிந்திய இடங்களிலெல்லாம் வியர்வை சிந்தலாயின! ''

இப்படி அவர் 'சேலம்' பிறந்த வகையை எடுத்து விளக்கினார், தமது தலைமையுரையில்!

''முன்னெல்லாம் நம் கட்சியி விருப்பவர்கள் சீமான்களிடம் செல்வார்கள். பிரசாரத்திற்கு, சீமானின் காரிலே ஏறுவார்கள். கார் டிரைவர் காங்கிரஸ்காரராக இருப்பார்.

''எங்கே போகவேண்டும்?'' டிரைவரின் கேள்வி இது. ''ஸ்டேஷனுக்கு!'' என்று பதில் பாதி காதில் விழு முன்பே, கதவு படார் என்று சாத்தப்படும். அதிலேயே டிரைவருக்குரிய காங்கிரஸ் பக்தியும், நம்மீதுள்ள வெறுப்பும் தெரிந்துவிடும்.

பத்தாண்டுகளுக்கு முன்னால் இந்த நிலை—இப்பொழுதோ, நாம் நடந்து சென்றால், வழியிலே பார்க்கிற அதே டிரைவர் காரை நிறுத்தி ஏற்றிக் கொள்கிறார். எங்கே செல்லவேண்டும் என்று அன்பாகக் கேட்டு, போகுமிடத்திற்குக் கொண்டுவிட்டுப் போகிறார். இப்பொழுது அவர் காங்கிரசிலே இல்லை—ஆனால் அந்தச் சீமான், காங்கிரசிலே சேர்ந்து விட்டார்.

சீமான் இருப்பதைவிட, கார் டிரைவர் இருப்பதற்காக பெருமையடைகிறாயா என்று கேட்டால் ஆம் என்றுதான் பதில் சொல்ல வேண்டும் நமக்குச் சீமானும் தெரியும். அவரின் காரின் விலை எத்தனை ஆயிரம் என்பதும் தெரியும். டிரைவரின் விலை மாதம் நாற்பது ரூபாய் தான் என்பதும் தெரியும், ஆனால் டிரைவரைத் தூண்டிவிட்டால் காரின் கதியும், சீமானின் விதியும் என்னாகும்?' என்று சி. என். ஏ. குறிப்பிட்டபொழுது, எழுந்த கைதட்டுதல் அடங்கவே வெகு நேரம் பிடித்தது.

* * *

சேலம்—ஒரு காலக் கண்ணாடி. இந்தக் கண்ணாடியில்தான் நம் இயக்க சரித்திரத்தின் முக்கிய நிகழ்ச்சிகளைக் காண முடியும்.

சீமான்களின் சிரிப்பிற்கும், பி... புக்களின் பெருமித வாழ்விற்கும் உழைப்பாளிகளின் வியர்வை வீணாக்கப்பட்டதை எண்ணி எண்ணி ஏங்கித்தான் முன்புசேலத்திலே கூடினர்.

திராவிடர் கழகம் எனப் பெயர் கண்டனர். கறையான்கள் ஒழிந்தன. தூசு போயிற்று—மாசு நீங்கிற்று—மணியும் ஒளிவிடலாயிற்று.

பட்டம், பதவிகளை விட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்தவுடன், படாடோபக்காரர்கள் ஓட்டம் பிடித்தனர். கட்சி, கறைநீங்கியதாயிற்று—களங்கம் மறைந்து; புது ஒளி வீசத் தொடங்கிற்று.

தேர்தல் திருவிழாவில் உலா வரும் உற்சவ மூர்த்திகளின் உறவும், தொடர்பும் முறிந்தன—நாமும் பிரிந்தோம். உழைப்பாளர்கள் நம்மைத் தழுவினர்.

கழகம் வளர்ந்தது — வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

சீமான்களின் சீற்றம், பணக்காரர்களின் வெறுப்பு, பதவி யாசைக்காரர்களின் பகை, தேர்தல் விரும்பிகளின் தூற்றல், அரசியல் சூதாடிகளின் அர்ச்சனை, பட்டம், பதவி வேட்டைக்காரர்களின் கண்டனம்—இத்தனையும் துச்சமெனத் தள்ளி நடந்தோம். பொது மக்களின் வாழ்த்தொலி, உழைப்பாளிகளின் வரவேற்புரை நம் காதுகளில் விழுந்தன.

சீமான் நம்மிடம் இல்லை—ஆனால் அவரின் கார்டிரைவர் இப்பொழுது நம்மிடம். இது 'சேலம்' செய்த ஜாலம் என்று அவர்கள் பேசினர்—பிறகு ஓய்ந்தனர்.

சேலம், அன்று, வைரத்தின்மீது புதிய பளபளப்பைத் தீட்டிற்று!

பிறகு, சேலத்தைச் சேர்ந்த ஏற்காட்டு ஏற்பாட்டால்,தான் மீண்டும் பிரிந்தோம்— இருந்தாலும் கொள்கைகளில் பிரியாமல், பணியாற்றுகிறோம், முன்னைவிட அதிதீவிரமாக, வெகு வேகமாக!

சேலம், முதலில் சீமான்களின் வெளியேற்றத்தைக் காட்டிற்று. பிறகு, உழைப்பாளிகளின் கூடாரத்தைப் படம் பிடித்தது.

சேலத்தில்தான் முதன் முதல் ஜனநாயகத் தென்றல் வீச ஆரம்பித்தது.

* * *

சேலம், பிரபுக்களின் பிடியை விலக்கி,கட்சியை, ஏழைகளின் இதயஒலியைஎழுப்பும் இயக்கமாக மாற்றியது மட்டுமல்ல, உண்மை ஜனநாயக உணர்ச்சிக்கு வித்திட்டது மட்டுமல்ல, தொழிலாளர்களுக்குத் தோழமை ஸ்தாபனம் என்பதை விளக்கியிருக்கிறது.

சேலத்தில் அண்மையிலே நடந்த நெசவாளரின் அறப்போரிலே முழுமூச்சாக ஈடுபட்டு வேலை செய்தது நம் இயக்கம்-தலைமை வகித்து நடத்தியவர் நம் தோழர், செயலாற்றும் செம்மல் சித்தையன்—தோன்றாத் துணையாய் நின்று பணியாற்றியவர் தோழர் நாராயணசாமி, மற்றும்பலப் பலர்-எல்லாம் நம் இயக்க இளஞ் சிங்கங்கள்!

பட்டாடைக்காரர்கள் விரட்டப் பட்டது மட்டுமல்ல, அவர்களுக்கு, பட்டும், பீதாம்பரமும் நெய்து கொடுத்து விட்டு, கந்தலையணிந்து, கம்புக்கூழைக்குடித்துவாடுவோரின் துயரைத்துடைக்கவும் பாடுபட்டது நமது இயக்கம். சேலத்திற்குரிய மற்றுமொரு சிறப்பு இது!

* * *

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த சேலத்திலேதான் மே 5, 6 தேதிகளில் சேலம் மாவட்ட திரா-



சேலம் மாநாட்டுத் தலைவர் வி. எம். ஜான்

விட முன்னேற்றக் கழக முதல் மாநாடு கூடிற்று.

அந்த இருநாட்களிலும்,சேலமே திராவிட இயக்கத்தின் போர்க்கூடாரமென எண்ணும்படி, இயக்க இரும்பு இதயத்தவர் ஏராளம் உலவியபடியிருந்தனர்.

'கோளம் கேட்கிறதா?' என்று 'கே'வுக்கு 'கே' தேடும் தோழர்களின் கேள்வி வீச்சைத் தடுக்கும் கேடயமாக, திருவிதாங்கூர் பகுதியைச்சேர்ந்த தோழர் வி. எம். ஜான் தலைமை வகித்தார்.

திராவிடப் பிரிவினைப் போரில் பெண்களின் அணிவகுப்பும் முன்வரிசையில் நிற்கும் என்று கூறுவதுபோல, சென்னைத் தோழியர் சத்தியவாணிமுத்து, துவக்கவுரை நிகழ்த்தினர்.

தி. மு. க, இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் பங்கு கொண்டனர்.

சேலம் ஒரு கால்க் கண்ணாடியல்லவா? இந்த மாநாடும், இயக்க வளர்ச்சியைக் காட்டத் தவறவில்லை.

திராவிட இயக்கம் இரண்டாகப் பிரிந்தபொழுது, ஆளுக்கொருவகையான ஆரூடங்கணித்தனர். அவை,அவரவர் ஆசையை, நாட்டுக்குத் தெரிவித்ததே தவிர, அவர்கள் எண்ணம்போல் எதுவும் நடக்கவில்லை.

மோதிக்கொள்வோம் என்றனர். அவர்கள் எண்ணங்கள் மோதிக்கொண்டனவே யொழிய, நாம் மோதிக்கொள்ளவில்லை.

பிரிந்தவர், இங்கே ஓட்டுவர், இவரை நத்துவர், அவர் பரணிபாடுவர், இவர் புகழ் பெறுவார், இந்தக் கொள்கை அவர்களுக்கு பிடிக்குமா, அந்தக் கொள்கையிலேதான் அதிகபற்று அவர்களுக்கு, இனி அவர்கள் அப்படியிருப்பர், இப்படிப் பேசுவார் என்று ஏதேதோ கூறினர் —எதுவும் நடக்கவில்லை.

தி. மு. க. பிறந்தது, வளர்ந்தது பிறர் கண்டு அஞ்சுகிற அளவு வளர்ந்து விட்டது!

ஆரூடங் கணித்தவர்களுக்கு திருச்சி திகைப்பைத் தந்தது! கணியூர் கண்விழிப்பளித்தது! ஆரணி, நம் போரணியைக் காட்டிற்று! குறிஞ்சிப்பாடி, நமது பாடிவீட்டுப் பாடலை பாடிற்று! கோவில்பட்டி குலைநடுக்கத்தை தந்தது! சிவகங்கை அவர்களின் சிந்தையைக் குண்டந்தது! சென்னையோ, அவர்களுக்கு, நம்வளர்ச்சியின் கணக்கைக் காட்டிற்று! காஞ்சியோ, நம் எழுச்சியை

அளந்தது! சோழவந்தான் இந்த நாட்டை வாழ்விக்க வந்தவர்கள்நாம் என்ற நம்பிக்கையை ஊட்டிற்று!—நாகர்கோவில், நம் இலட்சியச்சித்தியின் தூரத்தை விளக்கிற்று! தஞ்சை அஞ்சாவீரரின் அணிவகுப்பு நாம் என்பதை அனைவரும் உணரச் செய்தது! இன்று சேலம், எல்லாவற்றையும் தொகுத்துக்காட்டிவிட்டது.

சேலம் மாநாடு, கடைசி மாவட்ட மாநாடு, அதே நேரத்தில் நாட்டோருக்கும் நாட்டை ஆள்வோருக்கும் முன்னறிவிப்பு மாநாடு.

நம் இயக்கம், இன்று நாம் எதிர்பார்த்ததற்குமேல் வளர்ந்து விட்டது. ஆகவேதான், எதிரிகள், தூற்றலை, நம்மைத் துளைத்திடும் ஆயுதமாகத் தேடியெடுத்து, போரிடுகின்றனர். நம்மாள்வார்களோ, அடக்குமுறை அம்புகளை வீசி வீசி கைசோர்ந்துவிட்டனர்.

இந்நிலையில், நம் இயக்கத்தோழர்களின் கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும் வளரவேண்டும். வளர்வதுகூடப் பெரிதல்ல—வளர்ந்ததை வகையாகக் கட்டுப்படுத்துவதுதான் கடினம் — ஆனால் அதுதான் தேவை!

வளர்ச்சியை சேலங்காட்டிற்று—அதோடு மட்டுமல்ல, அதனைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்பதையும் காட்டிவிட்டது சேலம்.

பந்தல் விபத்து இதற்கொரு பரீட்சையே நடத்திவிட்டது.

காலை நிகழ்ச்சி முடிந்தது—மாலை நிகழ்ச்சி தொடங்குவதற்குள் பந்தல் விழுந்துவிட்டது.

இயக்க நரம்புகள்போன்றதோழர்கள், இதனைக்கண்டு நடுங்கியா போனார்கள்? இல்லை. மாலை நிகழ்ச்சியை, பந்தலுக்கு வெளிப்புறத்திலே இருந்த பரந்தவெளியில்நடத்தினர். அந்நிகழ்ச்சி முடிவதற்குள், பழக்கம் இருக்கிறதோ இல்லையோ, அந்தப் பந்தலமைப்பு வேலையில், அதுபற்றிய கவலையின்றி, பந்தலையமைத்தனர். இரவு பத்து மணிக்குள், பந்தலை முடித்து, நாடக நிகழ்ச்சியை நடத்தியே காட்டினர். கட்டுப்பாட்டோடு, கடமையுணர்ச்சியோடும் காரியமாற்றினால், முடியாததொன்றில்லை.

சிறு புயல் — பெரிய பந்தலைச் சாய்த்துவிட்டது!

ஆரியப் புயல் திராவிடத்தை இப்படித்தான் சாய்த்துவிட்டது! அதனால் சேதம், எட்டில் முடியாத அளவு அதிகம்! மேடை தாழ்ந்து விட்டது, திரைகள் அறுந்துவிட்டன, பல்புகள் நொறுங்கின, ஒலி பெருக்கி உடைந்தது, அவருக்கு சிறு காயம், இந்த அம்மைக்கு அடி என்று பந்தல் விழுந்தால் சேதக் கணக்கு காட்டுவார்களே, அது போலல்ல, ஆரியப் புயலால் விழுந்த திராவிடத்திற் கேற்பட்ட சேதம்—மிகப் பயங்கரமானது, நினைத்துப் பார்க்கவும் பரிதாபகரமானது!

சேதம் ஒரு துறையிலல்ல—பல வழிகளில்!

சமூகத்தின் பேதம் வளர்ந்து விட்டது! பொருளியலில் நம்மைச் சுரண்டுவோர் அதிகரித்து விட்டனர்! அரசியலில், நாம் பிறருக்கு அடிமை! இப்படி ஆரியப் புயலால் அவதிக்கு ஆளானோம். சுழன்றடிக்கும் சூறாவளி போலவே, துன்பமும் நம்மைத் துரத்தி துரத்தியடித்தது! வேதனை, நீங்காத தோழமை பூண்டது!

புரோகிதத்தின் பிடி நீங்கவேண்டும், அயலார் சுரண்டல் நிறுத்தப்படவேண்டும், நம் நாடு நமதாகி, நம்மாட்சி மலரவேண்டும். இதற்கு நாம் போராடவேண்டும்.

ஆரியப் புயலால் ஏற்பட்ட சேதத்தை நாம் மீட்கவேண்டும். விழுந்த திராவிடத்தை, நிமிர்த்திட வேண்டும். அதற்கு நெஞ்சுரம் வேண்டும்.

விழுந்த பந்தல் எழுந்தது — விழுந்த திராவிடமும் எழும் என்பதைச் சேலங் காட்டிவிட்டது!

சேலம், நமது சிந்தனைக்கோர் புது ஒளியைத் தந்துவிட்டது. கட்டுப்பாடு, கடமையுணர்ச்சி இவைகள் நமது கழகத்தில் எந்த அளவு வளர்ந்திருக்கிறது என்பதைப்படம் பிடித்துக் காட்டிற்று.

அருமையான காட்சி! அதை, நாம் கண்டோம் சேலத்தில்! கழகத்தின் முன்னணி வீரராயிருந்தாலும் சாதாரணத் தொண்டராயிருந்தாலும் தொண்டு செய்வது என்று வரும்போது தோளோடு தோளிணைந்து வேலை செய்தனர்.

சாதாரணக் காட்சியா இது? அதுவும், இந்தத் துரதிஷ்ட பூமியில்!

எனினும், நம்மிடம், இந்தக் காட்சி மலர்ந்திருக்கிறது.

நமது எண்ணங்கள் வெற்றி பெற்றுக்கொண்டே உள்ளன. நாம் வளர்ந்துகொண்டே உள்ளோம். நம்மிடை "நாம் எல்லாம் ஒரே குடும்பம்" என்கிற பாசமும் நேசமும் வளர்கிறது! வளர்கிறது!!

இந்த வளர்ச்சியை அதிகமாக்குவோம்—நமது இலட்சிய முரசை வேகமாக ஒலிப்போம் — நமது ஆசைக்கனவுகளை மலரவைப்போம்!

வாழ்க, நமது சகோதரர்கள்!

வளர்க, நமது கட்டுப்பாடு!!

இன்பத் திராவிடத்தின்
ஏற்றங்கூறும் எழிற்சிற்பங்கள்
மிளிரும் எழுத்தோவியம்
"தேன் கூடு"
—புதுமை ஏடு—
ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியில் வெளியாகிறது
தனி இதழ் 0—¼—0
ஆண்டு சந்தா 1—8—0
விவரங்கட்கு:—
7, வெண்கலக் கடை முதல் தெரு,
(A) மதுரை.

திருப்பாதிரிப்புலியூர்
தி. மு. கழகத் திறப்பு விழா
21—5—51ல் மஞ்சகுப்பம்
மைதானத்தில்,
சி. என். அண்ணாத்துரை, M. A.,
கே. ஏ. மதியழகன் B. A.,
ஆகியோர் பேசுவர்.
(A) எஸ் இராமச்சந்திரன்,

"சங்குநாதம்"
வார இதழ் ஆசிரியர்: ச. பழநிவேல்
13–5–51 முதல் ஞாயிறு
தோறும் வெளிவருகிறது.
நிர்வாகி,
(A) சங்குநாதம், சிவகங்கை.

11-ம் பக்கத் தொடர்ச்சி

"செல்வாக்குள்ள கழகத் தொடர்பை கொண்டு, இந்த காங்கிரஸ் பாசிசத்தை முறியடிக்கலாம். நாம் வெற்றி பெறலாம்" — இந்த எண்ணத்தோடு, இன்னொரு இபக்கம்.

"நான் எந்தக் கட்சியிலுமில்லை! மக்கள் நன்மைதான் எனக்குக் கட்சி, கவலையெல்லாம். அதனால் தான், நானே நிற்கிறேன்" என்று சொல்லி வாக்குப்பெற முடியும் என்ற கருத்துடன், சில தனிப்பட்டவர்கள்.

இதுபோல பல ரகம், உண்டு— 'புது மாளிகை' நுழையும் ஆசையோடு.

இந்த ரகங்களில், சட்டசபைக்குச் செல்லவேண்டும், சென்றால் அங்கே மக்கள் வாழ்வை வளமாக்கப் பாடுபடவேண்டும், என்கிற ஆசைகொண்டோர் சிலராகத்தான் இருக்க முடியும்.

இப்போது, தேர்தலை எண்ணிக் கிளம்புவோரைக் காணும்போது, இது உண்மையென விளங்கும்.

[illegible] பலர் — எனினும், முழக்கமிடுகின்றனர், தேர்தலில் நிற்கப்போவதாக.

கட்சியில்லாதோர் — அவர்களும், ஆர்ப்பரிக்கிறார்கள். தேர்தலில் நிற்பதற்காகச் சில புதுக் கட்சிகள்.

பழைய 'லேபிலை'ப் புதுப்பித்து தேர்தலில் நிற்க, ஒரு சிலர் முயற்சி.

இத்தகைய, பல காட்சிகள், தேர்தலை யொட்டி ஏற்படத் துவங்கியுள்ளன.

காங்கிரஸ் எதேச்சாதிகார தர்பாரை முறியடிக்க, சட்டசபைகளிலே வலிமை பொருந்திய எதிர்க்கட்சியொன்று இருக்கத்தான் வேண்டும். ஜனநாயகம், என்ற சொல்லின் சுந்தரம், காங்கிரஸ் ஆட்சியில் கரைந்துவிட்டது. ஆகவே, உரத்த குரலில் தண்டும் தடியும் தூக்கித்திரியும், காங்கிரஸ் ஆட்சியின் அதிகாரத் திமிர் அழிக்கப்பட, நல்லதோர் எதிர்க்கட்சி சட்டசபையில் இருக்கத்தான் வேண்டும்.

ஆனால், இன்று ஓரிரு கட்சிகளைத் தவிர, தேர்தலுக்கு நிற்கப்போவதாகக் கூறும் பலரிடையே இந்த நல்லெண்ணம் இருப்பதாகத் தென்படவில்லை.

மக்கள் நலனுக்காகப் பணியாற்ற வேண்டும் என்கிற ஆசைக்குப் பதில் 'அய்யப்பனை' கொண்டுபோய் காட்டலாமா, அதன் மூலம் பாமர மக்களின் நம்பிக்கையைப் பெறலாமா என்கிற விருப்பத்தோடு, சமய சஞ்சீவிகள் சிலர் தோள்தட்டுகிறார்கள்.

அதேபோல, காங்கிரசிலிருந்து பிரிந்து, தனியாகத் தேர்தலில் நின்று ஜெயிக்க வேண்டும் என்ற கருத்துடன் பல பழந் தியாகிகள், முழக்கமிடுகிறார்கள்.

தோள் தட்டுவதும், முழக்கமிடுவதும் 'புது மாளிகை' போகவேண்டும், நாமும் சட்டசபைக்குள் செல்லவேண்டும் என்கிற ஆசையின் விளைவுதான்.

இந்த ஆசை கூடாது என்று நாம் கூறவில்லை.

ஆனால், இந்த ஆசையிருக்குமளவுக்கு, உண்மையான பொதுச் சேவையில் ஈடுபடவேண்டும் ஆர்வமும் அவர்களிடம் இருக்கவேண்டும்.

மக்களின் வாழ்வு இன்று பாழில் சிக்கிய படகு! இந்த நிலையிலிருந்து, மக்கள் சமுதாயத்தை விடுவிப்பதிலிருக்கும் சங்கடங்கள், சாதாரணமானவையல்ல. அவ்வளவு கேடுற்றுக் கிடக்கும் நமது மக்கள் வாழ்வைச் செப்பனிடுவதே என் பொறுப்பு என்று உள்ளத்தில் கொண்டோராக, அவர்கள், இருக்க வேண்டும்.

ஆனால், இன்று கிளம்பியுள்ள புதிதுகளும், பழசுகளும் தேர்தலில் ஜெயிப்பது, காங்கிரசை தோற்கடிப்பது, என்று தோள் தட்டுகிறார்களே தவிர இன்னின்ன உருப்படியான காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று குறிப்பிடவில்லை.

தேர்தல் வெற்றியை முதலிலும், பிறகு மக்கள் நன்மையைக் குறித்துமே பேசுகிறார்கள்.

முதலில் அவர்கள் மனதில் வந்து நிற்பது, சட்டசபை மாளிகைக்குள் செல்லவேண்டும் என்கிற ஆசைதான்.

இதற்குக் காரணம் சட்டசபை உறுப்பினரானால், சகல சௌபாக்யங்களும் பெறலாம், நல்வாழ்வு வாழலாம். [illegible] குரல் அதிகாரத் தொனி பெறும் என்கிற ஆசை, ஏற்பட்டிருப்பதுதான்.

சட்டசபைக்குச் செல்வது என்றால், இத்தனிச் சலுகைகளைப் பெறலாம், பேரும் புகழும் அடையலாம் என்கிற மட்டரகமான ஆசை, இப்போது நாட்டில் பலரிடையே மலர்ந்திருக்கிறது.

பொது வாழ்வின் இலட்சியம், சுகவாழ்வு பெறுவதே என்கிற இத்தகைய அருவருக்கத்தக்க நிலை ஏற்பட்டதுகூட, காங்கிரஸ் ஆட்சியினால் உண்டாகிய போக்கின் விளைவுதான்.

காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் பெறும் சுகவாழ்வு, அதிகாரக் குரல், புது வசதிகள் ஆகியவைகளைக் காணும்போது, பலருக்குச் சபலம் ஏற்பட்டிருக்கிறது.

இன்று நாட்டில், தேர்தலை வைத்துப் பார்த்தால் உருப்படியான கொள்கைகளோடு, தேர்தலில் நிற்போர் தொகை மிகக் குறைவாகவே தென்படுகிறது.

இந்த நிலை — மிகக் கேடுபாடானதுதான்.

'புது மாளிகை'க்குள் புகும் ஆவலைவிட, பொது மக்களுக்குப் பாடுபட வேண்டும் என்கிற ஆர்வம் அதிகமாக இருக்கவேண்டும்—தேர்தலில் போட்டியிடுவோருக்கு.

அதுவே, நல்லது — அவர்களுக்கும் நாட்டுக்கும்.

தமிழர்க்கோர் நற்செய்தி!

1. 1951. தமிழ்ப்புலவர் புகுமுகத் தேர்வு

(Entrarce Test)

2. E. S. L. C. அச்சுப் படங்கள்!

தபால் மூலம் இலவச போதனை!

பிரகடனம், விண்ணப்பத்திற்கு, 2-அணா தபால் பில்லை அனுப்புக.

பாரதி கலைக்கோயில்

சிஷிவந்தியம் P. o. (S. A. Dt)

திராவிட நாடு

ஞாயிறு] 13—5—51 [காஞ்சி

நெருங்கிவிட்டது

★

"விடமாட்டோம்!"

"வழக்கு போட்டால் என்ன? நியாயம் நம்மிடம் ஆகவே, ஜெயிப்போம்!"

"பரவாயில்லை. ஹைகோர்ட்டில் தோற்றுத்தான் போயிற்று. ஆனாலும் சுப்ரீம் கோர்ட்டில் பார்க்கிறோம்..."

"புதிய அரசியல் இடங்கொடுக்காததால் துவண்டுவிட மாட்டோம்"

"எதிர்க் கட்சிகள், இதுதான் சந்தர்ப்பமென எங்களை வீழ்த்தப் பார்க்கின்றன. எங்களுக்கு மட்டுமில்லையோ அக்கறை, பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்தில்."

"சர்க்கார் யாருடையது? எங்களுடையதுதானே. மேலிடத்துக்குச் சென்று,புதியஅரசியல்அமைப்பையே திருத்தச் சொல்கிறோம். இதைக் கூடவா, மறுக்கப் போகிறார்கள். மறுத்தால் நாங்கள் என்ன மரங்களா! விலகக்கூட எங்கள் மந்திரிமார்கள், தாமதிக்கமாட்டார்கள். ராஜீனாமா, செய்வார்கள்."

* * *

கேட்டீர்கள் தோழர்களே! இத்தகைய கர்ஜனையை, காங்கிரஸ் தலைவர்கள் எழுப்பிடக் கேட்டீர்கள், பொது மேடைகளிலே! காங்கிரஸ் ஏடுகள் — பார்ப்பனரல்லாத ஆசிரியர்களைக் கொண்டவை—தீப்பொறி பறக்கத் தீட்டியதைக் கண்டீர்கள்!

வகுப்புவாரி உரிமை குறித்து, காங்கிரஸ் மந்திரிகள் சட்டசபையிலே எழுப்பிய கர்ஜனைகள், காற்றோடு போய்விடவில்லை. இதோ! இன்றும், நம் இதயத்துள் கிடக்கின்றன. எவ்வளவு வீரம்! எத்துணை வேகம்! சண்டமாருதப் புயலெனப் பேசினர், மாதவ மேனன். அவர் மட்டுமா? கம்யூனல். ஜி. ஓ. பிரச்னை மீது, புயலையும் எரிமலையையும் நமக்கு நினைவூட்டிச் சங்கநாதம் செய்தனர், நமது அமைச்சர்கள்! காமராஜர், செல்லுமிடமெல்லாம் கர்ஜனை செய்தார், 'கம்யூனல் ஜி. ஓ.'விஷயத்தில் காங்கிரஸ்பின்வாங்கிவிடாது' என்று. அவரது 'ஆலவட்டங்கள்' எழுப்பிய ஆர்ப்பரிப்புகள் எத்துணை! அவரது கட்சி ஏடுகளாம், 'தினசரி'யும், காண்டீபமும்' தீட்டிய எழுத்துக்கள் எவ்வளவு! அறுந்த நரம்புகளிலே — புத்துணர்ச்சியைப் புகுத்துவதுபோல, ஒடிந்த எலும்பை ஒட்டவைப்பது போல, பேனாக்களிலிருந்து தீப்பொறிகள்! "பேச்சுக்களிலே எரிமலை வேகம்!!

சமநீதி உரிமை குறித்து தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் எழுப்பிய முழக்கங்கள், திகைத்த நம் இதயங்களிலே தென்பு பிறக்கச் செய்தன. நீர் வழிந்த கண்களிலே நெருப்பு! கவலை கொண்டோர் இதயங்களிலே உலைக் கூடம்!

"காங்கிரஸ் சட்டசபைக் கட்சி விடாது" — இதுபோலக் கூறினர். நாம், 'மாண்டவர் மீள்வர்' சமூக நீதி பிழைக்கும் என நம்பினோம்.

"எமது தீர்மானம் தோற்றால் எமது மந்திரிசபை ராஜினாமா செய்யவும் தயங்காது" என, பத்திரிகைகள், செய்திதந்தன. நமது இருண்ட கண்களிலே புது ஒளி பிறந்தது!

"கம்யூனல் ஜி. ஓ. நீடிக்கும் வகையில் அரசியலமைப்பைத் திருத்த வேண்டும்" — என்று, சென்னை மேல் சபையிலே தீர்மானமொன்று நிறைவேறிற்று. அதோடு நின்றுவிடவில்லை, அத்தீர்மானம் உடனடியாக 'டில்லி'க்கு அனுப்பப்பட்டது. நமது இதயத்திலே நம்பிக்கை மலர்ந்தது!

"கம்யூனல் ஜி. ஓ: விஷயமாக 'மேலிடம்' நோக்கிச் செல்கிறோம். மேலிடத்துத் தலைவராம் பண்டித நேருவைப் போய்ப் பார்ப்போம்" என்று கூறிவிட்டு 'டில்லி' நோக்கிப் புறப்பட்டார், நமது மாகாண முதலமைச்சர் குமாரசாமி ராஜா. அவரோடு மற்ற மந்திரிகளாம் கோபால ரெட்டி, சீதாராம ரெட்டி, பக்தவத்சலம் ஆகியோரும் புறப்பட்டனர். நமது எண்ணத்திலே உற்சாகம் எழும்பிற்று! ஒருவர் அல்ல போவது. நான்கு பேர் செல்கிறார்கள். ஆகவே, விஷயத்தை 'டில்லி'க்கு விளக்கி வெற்றியோடு திரும்புவர் என்று எதிர்பார்த்தோம். ஆசையோடு, 'டில்லிச் செய்தி'யை நோக்கிக் கிடந்தோம்! டில்லி சென்றவர்கள், திரும்பிவிட்டனர்—புலியைப் பிடிக்கப்போய் எலிகூட இல்லாது கிலி கொண்ட மனத்தினராய் மந்திரிகள் நால்வரும், திரும்பிவிட்டனர்!

திரும்பிய அமைச்சர் கோபால ரெட்டி கூறிவிட்டார்:

கம்யூனல் ஜி. ஓ. நீடிக்கும்வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட மாட்டாது.

இத்தகவலைத் தந்துள்ளார், தயக்கம் எதுவுமில்லாது. எதற்காகச் சென்றனரோ அக்காரியம் கைகூடாமல் திரும்பிவிட்டார்கள்! திகைக்கிறீர்கள் — ஆமாம், தோழர்களே ஆமாம் — தீப்பொறி பறக்கச் சங்கநாதம் செய்தனரே என்று கேட்கிறீர்கள். "உங்கள் கண்களிலே கோபாக்கினி எழும்புவதும் இதயங்கள் துடிப்பதும், எண்ணங்கள் எரிமலையாவதும் எனக்கு நன்றாகத் தெரிகிறது. என்ன, செய்வது?" என்று, பதில் சொல்வது போலத்தான், மந்திரியார் இந்தப் பதிலைத் தந்துள்ளார். உங்கள் மனதிலே சம்மட்டி விழுந்தது போலிருக்கும் இந்தப் பதில். ஆனால், அவர் மந்திரியல்லவா? ஆகவே, சாவதானமாகவே, இந்தப் பதிலைத் தந்திருக்கிறார் — துளிகூட பதைபதைப்பின்றி. "என்ன, கோரம்! எங்கே இவர்கள் வீரம்! முழக்கங்கள் முடங்கி விட்டனவா? கர்ஜனைகள் காட்டுக் கூச்சலாகி விட்டனவா! கண்கள் புது ஒளி பெறும் என நம்பினோமே — இப்போது கையாலாகவில்லை என்று, திரும்பிவந்து சொல்கிறாரே!" என்று கேட்பீர்கள். "என்ன நாடு இது! இங்கே, பெயருக்கேன் ஒரு மந்திரி சபை—சர்க்கார்—ஆட்சி எல்லாம்." என்று ஆத்திரப்படுவீர்கள். "மேல் சபை தீர்மானம் நிறைவேற்றிற்றே அதைக்கூடவா மதிக்கவில்லை மத்ய சர்க்கார்" என்று கேட்பீர்கள். உங்கள் கேள்விக்கும், பதில் தந்துள்ளார் இன்னொரு அமைச்சர், சீதாராம ரெட்டி. அவரை, பத்திரிகை நிருபர் கேட்டாராம். "சர்க்கார் உத்யோகங்களில் ஆட்களெடுப்பதிலும்

தொழில் காலேஜூகளில் மாணவர்கள் சேர்ப்பதிலும் எல்லா வகுப்பாருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்று சென்னை மேல்சபை நிறைவேற்றி, மத்திய சர்க்காருக்கு தீர்மானம் அனுப்பினீர்களே! அது என்னவாயிற்று?'' என்பதாக. இந்தக் கேள்வியைக் கண்டதும் சீதாராமரெட்டியார் சிரித்தாராம்! 'கனம்' மந்திரி சிரித்தாராம்! 'டில்லி'பேர்ய் வெறுங்கையுடன் திரும்பிய அவர் மனதில்மட்டும் தென்றலோ?'' என்று நினைக்கவேண்டாம். அவர் சிரித்தாராம் — அதில் அசடு வழிந்ததா, சோகம் தென்பட்டதாஎன்று நமக்கு விளக்கவில்லை அந்த நிருபர். ஆனால், அவர்தந்த பதிலைமட்டும் தந்திருக்கிறார். பாருங்கள்! பார்த்ததும் "பதிலா இது?'' என்றுகேட்கத்தோன்றும். சென்னை மாநில அமைச்சர், அவர். அவர் கூறினாராம்—சிரித்துக்கொண்டே,

"சென்னைத் தீர்மானம் சென்னையிலேயே இருக்கிறது''

எவ்வளவு வேதனையான பதில் இது! சென்னைத் தீர்மானம் சென்னையிலேயே இருக்கிறதாம் — டில்லிக்குக்'காவடி' தூக்கிச் சென்று திரும்பிய 'கனம்' சொல்கிறார்! எப்படியும் அரசியலமைப்பைத் திருத்துவோம் என்று முழக்கமிட்டுச் சென்றவர் கூறுகிறார்! 'முத்தண்ணா போல' முகத்தை, கருந்துணியால், முக்காடு போட்டுக்கொள்ள வேண்டிய சம்பவம் இது. ஆனால் மந்திரியார் சிரித்தாராம்! பிறகு, செப்பினாராம், இந்த 'திருச்செய்தியை!' ஒருவர் போதாதென்று நால்வர் சென்றனர் டில்லிக்கு, இப்போது திரும்பிவந்து, 'கம்யூனல் ஜி. ஓ. திருத்தப்படமாட்டாது'' என்று பதில் தருகின்றனர்—பதட்டமோ, பதைப்போ, எதுவுமின்றி!

வெட்கக்கேடான செய்தி இது! ஒரு மாகாண சர்க்கார், தனது மாகாண மக்களின் வாழ்வைப் பாதிக்கும் கேடு நீக்கவேண்டுமென 'தூது' சென்றும் தோல்வி! மக்களின் எண்ணங்களை எதிரொலிப்பதெனக்கூறப்படும் சட்டசபையொன்று, தீர்மானம் அனுப்பி இருக்கிறது. இருந்தும், டில்லிதேவதைகள் தங்கள் திருப்பார்வையைத் திருப்பவில்லை! உதாசீனம் செய்துவிட்டனர்! 'உதவாது—முடியாது—இப்போது ஆகாது! என்று,சென்றவர்களைத் திருப்பி அனுப்பியிருக்கின்றனர்.

கம்யூனல் ஜி. ஓ. வுக்குப் பதில் புதிய விதிகள் அல்லது புதியஉத்தரவு பிறப்பிக்க கூடியசீக்கிரம் சென்னை சர்க்கார் ஆலோசிக்கும்.

கனம் பக்தவத்சலம் வந்து தந்த செய்தி — ஆலோசிக்குமாம்! இதுவரை ஆலோசித்து, மேல்சபை தீர்மானம் நிறைவேற்றி, மந்திரிகள் நால்வர் டெல்லி சென்றதெல்லாம் ஆலோசனை இல்லாததால் செய்ததையா? இவர்கள் ஆலோசனையில்லாத அமைச்சர்களா? அல்லது இவர்கள் ஆலோசனையெல்லாம் 'டெல்லி' ஆடிக்காற்றிலே அகப்பட்ட இலவம் பஞ்சாகிவிட்டதா? புதிதாக என்னஆலோசனைவேண்டியிருக்கிறது!

கம்யூனல் ஜீ. ஓ.வை நிலைநிறுத்த முடியவில்லை—புதிய விதிகள் தேடப்போகிறார்களாம்; புதிய உத்தரவு போடப்போகிறார்களாம்! ஐயோ, இவர்கள் நாக்குகள் சுழல் நாக்குகளா? நிமிடத்திற்கொரு நினைப்பு—மணிக்கு மணி மாற்றம்—நாளைக்கொரு நடவடிக்கை — உறுதியில்லாத இந்த உலுத்தமனம் படைத்தவர்களிடமல்லவா, திராவிடம் சிக்கிக்கொண்டதென்கிற எண்ணம் வரும்பொழுது ஏற்படும் வேதனை தாங்கமுடியாததாகிவிடுகிறது.

சென்னைப் பிரதமர், அன்று தொடங்கிய கடிதப்போக்குவரத்தை இன்னமும் நிறுத்தவில்லை போலும்! உள்நாட்டு மந்திரி கனம் ஆச்சாரியார் கூறிடும் தகவல் இது. நேரில் சென்றும் என்னகொண்டு வந்தனர்—'முடியாது' என்ற முனகலை, 'திருத்தக்கூடாது' என்ற திருப்தியில்லாத முணுமுணுப்பை 'வேறு விதிகள் அமைப்போம்' என்ற முகாரியை!

இவர்கள் கர்ஜனை, பூனையின் 'சிச்' சத்தமாகிவிட்டது! எரிமலை பேச்சு, வெந்நீர் பானை கொதிப்பாகிவிட்டது! புயல்நடை உறுதிகள், புழுதியிலே விழுந்துவிட்டன.

வீரம்பேசி, இப்போது வெறுங்கையுடன் திரும்பிய நமது மந்திரிமார்களில் — சிரிக்கிறார் ஒருவர்; விழிக்கிறார், மற்றொருவர்! புதுவிதி தேடுகிறார் இன்னொருவர், கடிதங்களை படித்தே யோசிக்கிறார் பிரதமர்!

இந்தக் காட்சி நாம்—எதிர்பார்த்ததுதான். ஏனெனில், சென்னையின் தீர்மானம் எப்போதும் சென்னையில்தான் இருக்கிறதே ஒழிய, ஒரு முறைகூட 'டில்லியால்' கவனிக்கப்பட்டதில்லை — இது, இந்த நான்கு ஆண்டுகளில் நாம் நன்றாக அறிவோம்.

எனினும், ஒரு மாபெரும் சமுதாயத்தின் வாழ்வு சாவுப்பிரச்னையான, கம்யூனல் ஜி. ஓ. விஷயத்தில் தென்னாட்டுக் காங்கிரஸ் கொண்ட சிரத்தையையும் ஆர்வத்தையும் நாம் மதித்தோம்.

அவர்களும், திராவிட சமுதாயத்தின் பிரஜைகள்தானே — பொறுத்துப்பார்ப்போம், இவ்வளவு வீரமுழக்கம் செய்கின்றனரே, என்று எண்ணினோம்.

ஆட்சிப் பொறுப்பிலிருப்பவர்களாயிற்றே, அதுவும் ஒரே கட்சி என்பதால், வசதியும் பாதையும் அவர்களுக்கு உண்டே என்று கருதினோம்.

இந்த அளவு அவர்கள் நடவடிக்கைகளிலே நாம் நம்பிக்கை காட்டினோம்.

ஏனெனில், வகுப்புநீதி எப்படியாவது காக்கப்படவேண்டும் என்பதுதான் நமது அக்கரை.

இந்தப்பிரச்னையை, நமது கழக வளர்ச்சிக்கான ஒன்று என்று நாம் கருதவில்லை.

'திராவிடநாடு திராவிடருக்கே!' என்ற உரிமைக்குரல் இப்போது முன்னைவிடப் பன்மடங்கு எதிரொலிக்கிற இந்த வேளையிலே, 'இந்தப்பிரச்னை கிடைக்குமா — அந்தத்தகராறு வருமா, என்று எதிர்பார்க்கவேண்டிய நிலையிலும், நாம் இல்லை. அதோடு காங்கிரஸ் கூடாரத்திலேயே, நமது அடிப்படைக்கொள்கை வேரூன்றிவிட்டது—அவர்கள் முயற்சியால் விளையும் பயன் நமது உழைப்பின் பலன் தான் என்று நாம், கருதினோம்.

இந்தக் காரியத்தையாவது, அவர்களாகச் செய்யட்டும்—அதன் மூலம், தேசிய கூடாரத்தில் பார்ப்பனரல்லாத மக்களின் உரிமைப் பேர்முரசு ஒலிப்பதை, "எதிரிகள்" அறியட்டும்—அதற்கு இது ஒரு சந்தர்ப்ப

மாக அமையட்டும், என்று எண்ணினோம்.

அதோடு, அவர்களை காரிய மாற்றுவதாக வீர முழக்கமும், வேண்டிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளும போது, நாம் நடுவில் எதுவும் செய்தல்தகாது. ஏனெனில் பிறகு பழியை, வெகு எளிதில் நம் மீது வீசிவிடுவார்கள்—இது, அவர்கள் பழக்கம். ஆகவே, அவர்கள் முயற்சிக்கு மக்கள் ஆதரவைத் தருவோம்—என்று மாசில்லாத மனதுடன் நடந்து கொண்டோம். ஆனால், இப்போது, தங்களாலான எல்லா வழிகளிலும் முயன்றும் தோற்று விட்டார்கள்!

வடநாட்டு ஏகாதிபத்தியம் தந்த பாடத்தோடு, திரும்பியிருக்கிறார்கள்.

வேதனையிருக்கிறதா அவர்களுக்கு, வேடிக்கைப் பிள்ளைகளாகவேதான் நடந்துகொள்ளப் போகிறார்களா, இனிமேலும் — என்பது பற்றி, நமக்குக் கவலையில்லை, இனி.

நாம், தரவேண்டிய அளவு சந்தர்ப்பம் தந்தோம்—திராவிட சமுதாய வாழ்வு, இருளாகாது, காக்க.

அவர்கள் முழக்கம், முயற்சி எல்லாம், வீணாகிவிட்டன. நாம் எதிர்பார்த்தோம்—அவர்கள் மூலம் நடைபெறும் இந்த முயற்சிக்காவது 'டில்லி' இணங்கும் என்று. ஆனால், வழக்கமாக நாம் கண்டுவரும் காட்சியே, இப்போதும் நடைபெற்றிருக்கிறது.

எனவே, இனி, நாம் ஏதாவது ஒன்றைச் செய்து தீரவேண்டிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டு விட்டோம்.

சமநீதி உரிமைப்பிரச்னை! எதிரிகளின் தந்திர சாகசங்களால் அது ஒடித்து எறியப்பட்டு விட்டது. அதை மீட்பதென்றால், இலேசான காரியமல்ல!

அதற்காக, நாம், விட்டுவிடக் கூடிய விஷயமுமல்ல, இது.

இதைச் சேலம் மாவட்ட தி. மு. க. மாநாட்டிலே பலர் எடுத்துப் பேசினர். கம்யூனல் ஜி. ஓ. குறித்து மேற்படி மாநாட்டுத்தீர்மானமொன்றும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது — திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுவினருக்குச் சிபாரிசு செய்து.

ஆகவே, தோழர்களே! அஞ்ச வேண்டாம் —பொறுத்தோம். 'டில்லி' விரட்டிவிட்டது! 'சென்னை' மிரண்டுகொண்டிருக்கிறது!

பெரும் புயல் எழும்பிவிட்டது! நமது உரிமைக் கோரிக்கை உதாசீனப் படுத்தப்பட்டுவிட்டது! நாம் சந்தர்ப்பம் தந்தோம் — தேசியக் கூடாரத்தினருக்கு. அவர்கள் முகத்திலும் கருப்புத்தடவி அனுப்பிவிட்டது, டில்லி! ஆகவே, நமது சமுதாய உரிமைக்காகப் பாடுபடவேண்டிய பொறுப்பு நம் தலையில் வீழ்ந்துவிட்டது.

இனி வெட்டிப் பேச்சுகளை நம்பி, வீணாய் காலங் கடத்தக் கூடாது திராவிடம்.

பொறுத்தது போதும், புறப்படுவோம் போர்க்களம் நோக்கி என்று பொங்கி யெழாமலிரார், திராவிடச் சிங்கங்கள். சமூக நீதி சாயக் கூடாது—சாய்ந்தால் இனம் சாயும், அவர்தம் வாழ்வு சாயும் என்பதை நாட்டோர் உணர்ந்து நாட்கள் பலவாகிவிட்டன. இதுவரை நம்பியிருந்தனர். அந்த நம்பிக்கை நாசமாகிவிட்டது என்பதைக் கண்ட பிறகும், கைகட்டி, வாய் பொத்தியிருக்கமாட்டார். அவர்கள் கண்களில் கனலைக் காணத்தான் போகிறோம். இனி. ஒரு நாளும் புனல் மட்டும் வழியாது!

தீப்பொறி தெருவெல்லாம் சிந்தத்தான் போகிறது—குமுறும் இதயங்கள், குவலயத்தை குலுக்கிடும் இதயங்களாகத்தான் போகின்றன.

ஆட்சியாளர்களின், 'வக்கணை' பேச்சுகளுக்கு இதுவரை மதிப்பளித்திருந்தார்கள். இனி முடியாது! கட்டுப்படுவோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்என்றுகாத்திருந்தோர், இப்பொழுது காலம் மாறவில்லை, காலம், அலங்கோலமாகி விட்டதைக் கண்ட பிறகும் அடங்கி யொடுங்கி ஆமைகளாய், ஊமைகளாய் இருக்க முடியாது—இருக்கக்கூடாது!

அரிது, அரிது, சும்மா யிருப்பதரிது என்று கூறியும் 'சும்மா' யிருந்தனர், இந்த 'சுந்தர புருஷர்கள்' மந்திரிகளாய் இருப்பதாலேயே எல்லாம் முடியும் என்று பேசினார்களே என்று எண்ணிக்கொண்டு! ஆனால் 'சுந்தரர்கள்,' கரி பூசி திரும்பிவிட்டனர்.

இனி போர் முரசு கொட்டத்தான் போகிறார்கள்! அந்நாள் நெருங்குகிறது — நெருங்கிக் கொண்டே யிருக்கிறது — நெருங்கியே விட்டது!

★

முகவரி மாற்றம்

இதுவரை, சென்னை, 202, தங்கசாலை வீதியிலிருந்த தி. மு. க. தலைமைக் கழகக் காரியாலயம், காஞ்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே தோழர்கள், இனி தலைமை நிலையத்திற்கு எழுதும் கடிதங்களை கீழ்க்கண்ட முகவரிக்கே எழுத வேண்டுகிறோம்.

தி. மு. கழகப் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முகவரியை அன்பு கூர்ந்து உடனே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்
தி. மு. க. தலைமை நிலையம்,
95, திருக்கச்சிநம்பித்தெரு,
காஞ்சிபுரம்.

தோழர்

கே. கோவிந்தசாமி

சென்னைத் தோழர், கே. கோவிந்தசாமி சென்றவாரம், மருத்துவம் பெற, மதனபள்ளிச் சென்று விட்டார். சென்னையை விட்டு, அவர் புறப்படும் பொழுதுகூட, உடனிருந்த தோழர்களிடம், 'எவ்வளவு விரைவில் என் உடல் குணமடைகிறதோ, அவ்வளவு விரைவில் இயக்கப்பணிசெய்யத்தயங்கேன்' என்று நெஞ்சுருகக் கூறும்பொழுது, தோழர்கள் கண்கலங்கிவிட்டனர்.

இப்பொழுது எம். எல். எல். ஆஸ்பத்திரியில் இருக்கிறார். இன்னும் ஒரு திங்களில் அவர் யூனியன் மிஷன் சானிடோரியத்தில் சேர்ந்து சிகிச்சை பெறுவார்.

என் நன்றி

திருச்சியில் நடந்த பாரதிதாசன் மணிவிழாவில் என்னுடன் ஒத்துழைத்து, விழாவை வெற்றியாக்கிய எல்லாத் தோழர்களுக்கும் என் அன்பு கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதார்த்தம் பொன்னுசாமி.

தொடர் கதை

யாத்திரை

தில்லை-வில்லாளன்

1

சுந்தரம்

எனது திடீர் படையெடுப்பு கண்டு திகைத்துப்போய் திக்குமுக்காடியிருப்பாய் — எனக்குத் தெரியும், பாம்பிருக்கும் புற்றிலிருந்து முத்துச்சரம் வந்து விழுந்தால் ஆச்சர்யமாகத்தானிருக்கும். அதுகூட சாதாரண உணர்ச்சி அசைப்போடு நின்றுவிடும். ஆனால் தேன் கூட்டிலிருந்து ஆலகால நஞ்சு வடிந்தால் ஆச்சர்யம் அணையை உடைத்துக்கொள்ளும். திகைப்பு திசைதப்பி நிற்கும், உணர்ச்சி ஒரு புயலைக்கிளப்பும். பத்மா, என்னிடமிருந்து ஒருமடல் வரும் என்று எதிர்பார்த்திருக்கவே மாட்டாய். அந்த விரிவான விளக்கமான காதல் விண்ணப்பத்தைக் கண்டு வியப்பால் விரிந்திருக்கும் உன்முகம், பருவக் கொந்தளிப்பால் உன்கண்களில் களிப்பும் கலக்கமும் கலந்து வழிந்திருக்கும்!

கிளைவின் ஆற்காட்டுப் படையெடுப்புகூட சந்தாசாகேபுக்கு அவ்வளவு வியப்பைத் தந்திருக்காது — ஆனால் என் கடிதம் உன்னைச்சுற்றி விட்டிருக்கிற அளவு வேறு எந்த செய்தியும் மயக்கமடையவோ, மனச்சுழற்சி கொள்ளவோ செய்திருக்கமுடியாது. ஆம், எதிர்பாராத இடத்திலிருந்து, எதிர்பாராத செயல் நிகழ்ந்தால் வியப்பும், திகைப்பும் வராமலே என்ன செய்யும்?

நான் எழுதியிருந்தவைகளை மற்றொருமுறை நினைவில் கொண்டு வந்து நிறுத்து — மனத்திரையில் நிழலாட்டம் போடவிடு. பிறகு சொல்லேன் அவசரமின்றி என்றுதான் இப்பொழுதும் சொல்லுகிறேன். இனி எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பேன்.

ஆண்டுகள் பலவாய் எண்ணி, எண்ணி, ஆனால் மூடி மூடி வைத்திருந்த எண்ணத்தின் புரட்சிதான் என்முடங்கல்— ஏனோ தானோ என்ற முறையில் காம நகரில் உலவும் காலிகள் கையாளும் தந்திர ஆயுதமல்ல! கேளடி பெண்குயிலே —மன்னித்துவிடு பத்மா, நான் கண்ட கனவுத்திட்டபடி உரிமையை அளவிற்குமீறி எடுத்துக் கொள், பிடுங்கிக்கொள், என்று என்னை விரட்டியடிக்கிறது என்மனம்! எழுதும்பொழுது இடையிடையே இப்படி இரண்டொரு இடங்கள் வந்தால் அதற்கு இப்பொழுதே மன்னிப்புக்கேட்டுக்கொள்கிறேன்— என் காதல் கதையை, அதில் நீகதாநாயகியான விதத்தை, நான்மட்டும் பார்த்து என்ன செய்யட்டும்! அதனால்தான் கதாநாயகியிடம் கதாநாயகன் பேசினான். இது சரியல்லவா?

என் முடங்கல் எப்படி உனக்கு வியப்பை அள்ளித்தந்ததோ, அப்படியே, அப்படியே என்ன, அதைவிட அதிகமாக ஆச்சர்யப்பட்டேன் அன்று நாடகக் கொட்டகையிலிருந்து திரும்பி வந்தபொழுது! ஏன் தெரியுமா? உன்னையேகேட்கிறேன், நீயே சொல் இதற்கு விடை — அன்று நாடகத்திற்கு எத்தனை அழகுமகளிர் வந்திருந்தனர். அழகு கூட்டத்திடையே உன்னைமட்டும் என்கண்கள் துருவித் துளாவிக் கண்டுபிடிப்பானேன்? பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையை முறைத்து முறைத்துப் பார்ப்பானாம்......இப்படியொரு பழமொழி சொல்வார்கள். ஆனால் பட்டிக்காட்டான் எவனும் கடைமுழுவதும் வெறிக்க வெறிக்கப் பார்ப்பதில்லை. காராஉருண்டையும், மசால்வடையும் அவன் மனதைக் கவர்வதில்லை. லட்டைக்கண்டு, நாக்கில் எச்சிலைச் சொட்டவிடுவான் ஒருவன், மைசூர் பாகைக்கண்டு மயங்கி நிற்பான் மற்றொருவன். ஜிலேபியைக்கண்டு 'ஜில்' ஆவான் இன்னொருவன் — அவனவன் ஒவ்வொன்றை எண்ணித்தான் பார்ப்பான். அப்படித்தான் அழகுக் கடையில் பத்மா அல்வாவைக் கண்டு அதைச் சுவைத்துவிடவேண்டும் என்று துடித்தேன். அந்தத் துடிப்பை உணர்ந்திருக்கலாமே பத்மா, என் எழுத்துக்களில்! அந்த எழுத்துக்கள் விட்டபெருமூச்சிலே ஏக்கம் இரங்கல்பல்லவி பாடியிருக்கலாமே, துயரம் அனுபல்லவி இசைத்திருக்குமே. திடமுடிவு சரணத்தில் தன் கைவரிசையைக் காட்டியிருக்குமே, உனக்கும் புரியவில்லையோ—புரிவிக்கும் ஆற்றல்தான் என்எழுத்துக்கள் இல்லாதொழிந்தனவா?

உலகத்து இன்ப இணைப்பு முறை வேடிக்கையாகத் தானிருக்கிறது! உன்னைக் கருப்பி யென்று கேலி பேசுகிறான் கண்ணன். அவள் கோணல் காலியென்று கிண்டல் புரிகிறான் கந்தன். ஆனால் நான் கண்கண்ட தெய்வம் என்று காதல் பூசை புரிகின்றேன். என்ன விந்தை...விநோதம் ... வேடிக்கை! ஏற்கனவே கருவாக இருந்த ஏக்கம் நாடக கொட்டகையிலே கண்ட 'திவ்ய தரிசனத்தால்' வளரத் தொடங்கிவிட்டது. அப்பொழுது தான் நான் ஆச்சர்யப்பட்டேன். இப்படியொரு பெண்ணின் நினைவு ஒரு பருவ மகனை ஆட்டிவைக்கும் என்ற உண்மையை ஏட்டில் படித்த பொழுதுச் சிரித்துமிருக்கிறேன். வாதிட்ட சிலரிடம் சீறியுமிருக்கிறேன். அதிவீரராமபாண்டியரைக் காரசாரமாகத் தாக்கியிருக்கிறேன். ஷேக்ஸ்பியரைக் கூட குறை கூறியிருக்கிறேன். காளிதாசரை வைதிருக்கிறேன். அவசியமற்ற அளப்பிலேஏன்இவர்கள் காலத்தைவீணாக்கினார்கள் என்று உண்மையிலேயே வருந்தியிருக்கிறேன் விவரம் தெரியாமல், அனுபவக் குறைவின் காரணமாக! ஆனால் அன்றுதான் கண்ணே நான் அனுபவ வாயிலாக உணர்ந்து கொண்டேன். இதில் பொய்யில்லை, வெறும் புகழ்ச்சியுரையுமில்லை. எல்லாம் உண்மை— முழுக்க முழுக்க உண்மை!

"அதோ பார் அக்கா" என்று உன் தங்கை லீலா கூறினபோது நீ திரும்பினாயல்லவா? ஏன் அவ்வளவு கடுகடுப்பு...வெறுப்பு...... பொய் நடிப்பு? இதனால்தான் இந்தத் தெய்வங்களையெல்லாம் கல்லால், செம்பால், பித்தளையால் செய்துவைத்தார்கள் போலிருக்கிறது நம் முன்னோர்கள்—அவர்கள் புத்திசாலிகள், அவர்கள் வாழ்க! இப்படித் தெய்வங்கள் எல்லாம் அடிக்கடி முகத்தைத் திருப்பிக்கொண்டு பராமுகமாய்த்தானிருப்பேன் என்று அடம் செய்தால் உலகம் உருப்படுமா? மக்கள் வாழ்வார்களா? ஆசை பத்மா, அப்படி முகத்தைத் திருப்பிக்கொண்ட நீ அடிக்கடி ஓரக் கண்களால் என்னைப் பார்ப்பானேன்? தப்பித் தவறி உன் கண்களை 'கையுங் களவுமாக' என் கண்கள் பிடித்துவிட்டால் குனிந்தபடியே குறும்பு சிரிப்பு சிரித்து என்னைக் குற்றுயிரும் குறையுயிருமாக்கினாயே, இது தகுமா?

"ஏன் அக்கா, சுந்தரம் உன்னை அப்படிப் பார்க்கிறார்?" என்று கேட்டாளே அந்தச் சுட்டிப்பெண் லீலா, அதற்கு நீ என்ன சொன்னாய்? எனக்குத் தெரியாது என்று எண்ணிவிடாதே! "இந்த சுந்தருக்கு இதுதான் வேலை. ஏதாவது குறும்பு செய்வதென்றால் மெத்த மகிழ்ச்சி. கல்லூரி மேடைகளில் பேசவந்தால் இந்த கன்னியரைக் கிண்டல் புரியாமல் இறங்குவதில்லை. இதெல்லாம் அங்கே வைத்துக்கொள்வதென்றால் யாருக்கும் தொல்லை இல்லை. ஆபத்தும் அணுகாது. இங்கே இப்படி பார்க்கிறாரே, அம்மா என்ன நினைப்பாள்? அப்பா தவறாகப் புரிந்துகொள்ள மாட்டாரோ? இன்று 'அவள்' என்ற நாடகமப்பா, எழுதியவர் என் கல்லூரித் தோழர் சுந்தரம், நான் பார்க்கவேண்டுமப்பா—என்று சொன்னபொழுது அப்பா சிரித்தார். இந்த 'சின்ன குட்டி' வேறு சந்தேகத்தை வளர்த்துவிட்டாள். சுந்தர் அக்காவின் 'கிளாஸ்மேட்' மகா வேடிக்கைக்காரரப்பா, நன்றாக எழுதுவார் நகைச்சுவையோடு பேசுவார்...என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்துவிட்டாள். அப்பா போவோம் அம்மா, நாடகத்திற்கு இனமாகவே நுழைவுச் சீட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரித்தார். அப்பொழுதே எனக்குப் பயம்—இப்பொழுது சுந்தர் நடந்துகொள்கிற முறையைக் கண்டால் சந்தேகம் வளரும். வரட்டும், நாளைக்கு கல்லூரிக்கு—அவரை வம்புக்கிழுத்து 'வாயடி கையடி' அடித்து......" இப்படியெல்லாம் எண்ணமலா போயிருப்பாய்—எண்ணியிருப்பாய் ஆனால் சொல்லவில்லை!

எத்தனையோ நாள்களுக்கு முன்னரே ஏற்பட்ட எண்ண மொக்கு உண்மை வாழ்க்கையில் மலர்ந்து மணம்வீசி மட்டுமல்ல, மகரந்த தூதனுப்பி மக்கட்பேறு பெற்றும் இன்பந் தந்துவிட்டது! 'அவள்' என்ற அந்த நாடகம் பார்க்கிற பொழுதே உனக்குத் தைத்திருக்குமே ஒரு வெது வெதுப்பான எண்ணம், ஒரு கத கதப்பான உணர்ச்சி—அப்படியொன்றும் ஏற்படவில்லையென்றால் இப்பொழுது நினைத்துப்பார்—என் முடங்கலைப் படித்த பிறகு, மடங்கி அடங்கிக் கிடந்த என் ஆசைக் கைதியின் விடுதலைக்குப் பிறகு, ஒடுங்கி நடுங்கியிருந்த உணர்ச்சிப் பசியின் உண்மை வேகத்தைக் கண்ட பிறகு! அந்நாடகம் யாருக்காக எழுதப்பட்டது என்று புரிந்துவிடும் உன்னையுமறியாமல் 'இந்த சுந்தர் மகா குறும்பர்' என்று திட்டிவிடுவாய், ஏன்? அந்த நாடகத்தில் வருகிறாளே, மல்லிகை—அவளைப் பற்றி அவளது காதலன்வருணிக்கிறானே, புரிகிறதா நான் சொல்கிற கட்டம்? கதாநாயகன் கண்ணன் என்ன சொல்கிறான்?...மல்லிகை, உன்னை மனதார நேசிக்கிறேன். என்னை மயக்கிவிட்டாயடி கண்ணே, என் மனத்தை இழுக்கக்கூடிய வல்லமை உன்னிடம் எப்படி அமைந்தது, ஏன் ஏற்பட்டது என்று புரியவில்லை—அதற்குக் காரணம் சொல்லக் கூடியவர்கள் இந்த உலகில் இருவரே உள்ளனர். ஆம், உன்னிரு கருவிழிகள் தான் அந்த புதிர் புரிந்த வித்தகர்கள்......என்று கண்ணன் பேசவில்லை பத்மா, மல்லிகைக்காகவும் சொல்லவில்லை. அந்த மல்லிகை வேடத்தில் தோன்றிய பெண்மணியின் கண்கள் அப்படியொன்றும் வசீகரிக்கும் காந்த பளிங்குகளாகவும் இல்லை. அந்த இடம் உனக்காக எழுதப்பட்டது. நான் பேசுகிறேன் கண்ணன் பெயரில், மல்லிகையிடம்பேசுகிற வேளையில் பத்மாவை எண்ணிக்கொண்டு!

அந்த நாடகத்தின் கதைப் போக்கு உனக்குப்பிடித்திருக்குமே அதை யூகத்துணர்ந்தே உனக்கு விருப்பமான கருத்துக்களைச்சேர்த்துக்கோர்த்துமுடித்தேன் 'அவள்' நாடகத்தை! பேசிப் பயனில்லை காண்,செய்து உன்கொள்கை பெண் என்று அடிக்கடிச் சொல்வாயல்லவா? அந்த உண்மையை மத்தியப் புள்ளியாக்கக்கொண்டு பலநிகழ்ச்சிகளைச் சுற்றியோடவிட்டிருந்தேன். ஆனால் ஒருதவறுசெய்துவிட்டேன். அந்த கடிதத்தை, அல்லது அதன் சாரத்தை, அதுதான் என் மனம் போட்டுவைத்திருந்த கற்பனைத் திட்டத்தை, உணர்ச்சி எழுதிய கையெழுத்துப்பிரதியை உன்னிடம் அனுப்பியிருக்கவேண்டும். அப்படி அனுப்பியிருந்தால் அந்த நாடகம், நாடகமாகத் தெரியாது. வாழ்க்கையாகத்தோன்றும்! கண்ணன் தெரியமாட்டான் மேடையில் சுந்தரம் தோன்றியிருப்பான். மல்லிகைக்குப் பதில் பத்மா நின்றிருக்கிறஉணர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

நாடகத்தின் கதைப்போக்கை நீ மறந்திருக்கமாட்டாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனினும் என்திருப்திக்காக என்உள்ளத்தின் அமைதியைக் கருதி மீண்டும் ஒருமுறைச்சொல்லுகிறேன், கவனம் குறையாமல் கண்காணி என் கதை அமைப்பை—ஒரு சிலையை நாம் பார்த்து அனுபவிப்பது வேறு—அந்த சிற்பியும் உடன்வந்து அதன் சிற்ப நுட்பங்களை, கலை நுணுக்கங்களை எடுத்து விளக்கும்பொழுது இருக்கிற உணர்ச்சியும், மகிழ்ச்சியும் வேறு வகையானவையே! சமைத்தவளின் கரங்களினாலேயே சோறு படைக்கப்பட்டு உண்ணும் பொழுது இருக்கிற மனநிலைக்கும், எடுப்பு சாப்பாடு சாப்பிடும்போது ஏற்படுகிற மனநலிவுக்குமுள்ள த்துணை வேறுபாடு, வித்தியாசம்! அதுபோலத்தான் நாடகத்தை எழுதிய நானே அதன் கதையமைப்பையும் போக்கினையும் எடுத்துச் சொல்லும் பொழுது, பத்மா, நீ அதனைநேரில் பார்த்து அடைந்த மகிழ்ச்சியைவிட அதிகமாகத்தான் அடைவாய், இது மட்டும் திண்ணம்!

(தொடரும்)

புது மாளிகை புகுவோர்

—X—

முதல் மந்திரி குமாரசாமி ராஜா, எல்லோரையும் அழைத்தார்.

சட்டசபைக் காரியதரிசி யாவரையும் வரவேற்றார்.

கனம் பக்தவத்சலம் வந்தார். சிவசண்முகம் உடனிருந்தார்.

தேர்தல் கமிஷனர் வெங்கடேஸ்வரனும் அவர்களோடு ஆலோசனையில் ஈடுபட்டிருந்தார்.

சர்க்கார் இன்ஜினியர் வ். ஆர். வெங்கடாச்சாரி, தனது திறமையைக் காட்ட சந்தர்ப்பம் இதுவே என மகிழ்ந்தபடி யிருந்தார்.

இத்தனைப் பேரும் கூடினர்—புதிய மாளிகை தேடினர். சட்டசபைகூட, புதுமாளிகை அமைத்து, அதில் போடப்படும் நாற்காலிகளையும் பரிசோதித்தனர். மெத்தைகளைத் தொட்டுப்பார்த்தார் முதல் மந்திரி—அதன் விலையைச் சொன்னார் வேறொருவர். அதிலுள்ள விசித்திர ஏற்பாடுகளை விவரித்தார், விபரமறிந்த மற்றொருவர். அதுபோல ஒளியேற்பாடுகளையும் பார்வையிட்டனர்.

சட்டசபைக்கான புதிய மாளிகை அமைத்தானபிறகு, இந்த வசதிகள் அங்கே செய்யப்படுமாம்!

பொதுத் தேர்தல் முடிந்தபிறகு கூடும் சட்டசபை, புதிய மாளிகையில் கூடுமாம்!

புதிய மாளிகை அமைத்திட முனைகிறார்கள், காங்கிரஸ் மந்திரிகள்.

சட்டசபைக்கு புதிய மாளிகை தேடுகிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியோ, சரிந்துவிழும் சுவர்களை சரி செய்வதிலே கூட தோற்றபடியுள்ளது.

இடிந்திடும் கோட்டையாக காங்கிரஸ் இருக்கிறது—அதனைப் புதுப்பிப்பதிருக்கட்டும், மேலும் இடியாமலிருக்கச் செய்யவே முடியாது தவிக்கிறார்கள், காங்கிரஸ் மூலவர்கள்.

சட்டசபைக்கு புதிய மாளிகை, நவீன நாற்காலி, விநோத விளக்கு தேடுகிறார்கள் காங்கிரஸ் மந்திரிகள்—ஆனால் காங்கிரஸ் கட்சியோ கையை, தலையில் வைத்தபடி, 'அதுவும் போச்சா, இதுவும் இடிந்ததா?' என்று ஒப்பாரி யிட்டவண்ணமுள்ளனர்.

புதிய மாளிகை, சட்டசபைக்கு! பழையகட்டிடம், காங்கிரஸ்—அதுவும் தினந் தினம் இடிந்து வரும் பாழ் மண்டபம் காங்கிரஸ்.

காங்கிரஸ் கமிட்டி கூடுகிறதென்றால், புதிய திட்டங்கள் தீட்டக் கூடுகிறார்கள் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. உள்ளே ஏற்பட்டுள்ள வெடிப்பை மறைக்க, ஏதோ புதிய நாடகமாடத் திட்டமிடுகிறார்கள் என்று எளிதில் கூறிவிடலாம்.

ஜனநாயக முன்னணியைக் கலைத்துவிட, கிருபளானியிடம் கெஞ்சினர் — மண்டியிட்டனர் — காங்கிரசுக்கு மரணகீதம் பாடவிடக் கூடாது என்று பல்லெல்லாம் தெரியக் காட்டினர். அவரைச் சரிக்கட்ட முயன்றனர். சரிந்திடும் சுவரைத் தாங்க அவ்வளவு பாடுபட்டு இப்பொழுது நிறுத்தி யிருக்கின்றனர். இதுவும் நிலைக்குமோ, நிலைக்காதோ—அதுவும் நெடுநாள்களுக்கு, இந்த முட்டு வேலை பலன் தருமோ, தாராதோ நாமறியோம்.

ஆந்திரப் பிரதேசத்தில், ரங்கா பிரகாசம் ஆகியோரை மீண்டும் அழைத்து ஒன்றாக்க, ஆந்திரக் கமிட்டி, ஒரு குழு அமைத்திடவும் முன்வந்து காரியமாற்றுகிறது.

தமிழகத்தில், ஏற்பட்டுள்ள இரு பிரிவுகளையும் ஒன்றாக்க, ஐவர் கிளம்பியுள்ளனராம். காமராஜரைக் கலந்திடவும், ஓ. பி. ராமசாமியாரை, ஒத்துவரச் செய்யவும் முனைந்து பணியாற்றிடுவராம். இதற்குத் தினசரி சொக்கலிங்கம் தலைமை வகிக்கிறார்.

கர்நாடகப் பிரதிநிதிகளை, நேரு கண்டு, ஒற்றுமை உபதேசம் பேசியுள்ளார்.

கேரளக் கோணல் வளர்கிறது—பெருகுகிறது.

ஒற்றுமைத் தீர்மானம் போடுகிறார்கள்—'ஒட்டுமாஞ் செடி' நடுகிறார்கள்.

புது மாளிகை, தேடுகிறார்கள்: அந்த மாளிகையிலே, அமரவேண்டும் என்கிற ஆசையால், இடிந்து விழும் கோட்டையைச் சரிப்படுத்த வேண்டுமென எண்ணுகிறார்கள்.

இலாபம் பெற்றோர்—அவர்கள். ஆகவே ஆசை, அதிகமாகத்தான் இருக்கும்.

* * *

சட்டசபை மண்டபத்துக்காக புது மாளிகை அமைக்க சிரத்தைக் கொண்டுள்ளார்கள், ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காங்கிரஸ் 'கனம்'கள்.

இடத்தைப் பார்வையிட்ட அவர்களில் பலருக்கு, அடுத்த தடவை, நாம் இங்கே வருவோமோ என்ற அச்சம் இருக்கத்தான் இருந்திருக்கும்.

அந்த அளவுக்கு நாட்டில் காங்கிரஸ் மீது, மக்களுக்கு வெறுப்பு வளர்ந்திருக்கிறது. வெறுப்பு விரிந்ததற்குக் காரணம் பலப்பல உண்டு. ஆனால் முக்கியமான காரணம்,

காங்கிரஸ்காரர்கள் ஆட்சிப் பொறுப்பை தங்கள் சுயநல வயல்களாக ஆக்கிக்கொண்டதுதான்.

இதனால்தான், காங்கிரஸ் என்றாலே பொதுவான வெறுப்பு எங்கும் பரவியிருக்கிறது. இந்த வெறுப்பு, வரப்போகும் பொதுத் தேர்தலில், காங்கிரசுக்கு சாவுமணி அடிக்கவே செய்யும்.

இந்த சூட்சமம் உணர்ந்ததால், பலர் இப்போது தோள் தட்டத் துவங்கியிருக்கின்றனர் — 'புது மாளிகை' நுழையுலாம் என்கிற ஆசையால்.

"பழைய வேடத்தோடு செல்லலாமா, புது வேடம் பூணுவோமா, புதுக் கட்சி அமைக்கலாமா, பழைய லேபிலை ஒட்டவைத்துக் கொள்ளலாமா"—என்று சந்தேகத்துக்கும் சஞ்சலத்துக்குமிடையே, ஒரு கூட்டம்.

"காங்கிரஸ் கரைகிறது—ஆகவே அதை எதிர்க்கும் எக்கட்சியாயினும், அதற்கே மக்கள் வாக்களிப்பர். நாமும் காங்கிரசை எதிர்ப்போர் தானே"—இப்படி ஒரு கட்சி.

(5-ம் பக்கம் பார்க்க)

சமூக சீர்திருத்த மாநாடு

★ திண்டிவனம் ★

காவேரிப்பாக்கம், நாகம்மையார் பந்தலில்

வேலாயுதம் அரங்கில்

20–5–51
ஞாயிறு
அன்று

தலைவர்:

நாரண துரைக்கண்ணன்

துவக்குபவர்:

கே. ஆர். ராமசாமி

தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணுதுரை

கலந்து கொள்வார்.

மாநாட்டுச் சொற்பொழிவுகள்

சாக்ரடீஸ்	அன்பழகன்
கமால்பாட்சா	ஈ. வே. கி. சம்பத்
சன்யாட்சன்	N. V. நடராசன்
மார்ட்டின் லூதர்	சி. பி. சிற்றரசு
ஆபிரகாம் லிங்கன்	இரா. நெடுஞ்செழியன்
வால்டேர்	காஞ்சி. கலியாணசுந்திரம்
ராஜாராம்மோகன்	கே. எ. மதியழகன்
வேமன்னு	என். எஸ். இளங்கோ
ரூசோ	மா. இளஞ்செழியன்
நாராயணகுரு	மனோகரன்

உலகைத் திருத்திய உத்தமர்கள் குறித்துப் பேசுவர்

மாநாட்டில்

இரே. இளம்வழுதி, எஸ். எஸ். இராமசாமி, பூ. கணேசன், இராமாமிர்தம் அம்மையார், சத்தியவாணி முத்து, ப. உ. சண்முகம், திருக்குறள் முனுசாமி, கா. அப்பாதுரை, என். ஜீவரத்தினம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, ஏ. கே. வேலன், தில்லை. வில்லாளன், சி. வி. எம். அண்ணாமலை *ஆகியோர் கலந்து கொள்வர்.*

கே. ஆர். செல்லமுத்து—சீர்திருத்தப் பாடல்கள் பாடுவார்.

இரவு: சி. என். ஏ., கே. ஆர். ராமசாமி பங்குகொள்ளும்

சந்திரமோகன்

கட்டணம்: நன்கொடையாளர் ரூ. 10, வரவேற்பாளர் ரூ. 5, பார்வையாளர் ரூ. 1 பெண்கள் 0—8—0

ஆ. தங்கவேலு,	**என். எம். கோபால், எஸ். பூபாலன்**
வரவேற்புக்குழுத்தலைவர்	*செயலாளர்கள்*
எஸ். நடராசன், கே. துளசிங்கம்	**எம். முத்துசாமி, எஸ். பி. ராசு**
தொண்டர்படைத் தலைவர்கள்.	*விளம்பர உறுப்பினர்கள்.*

— திண்டிவனம் தி. மு. க.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at DravidaNadu" Press